# மொழியை ஆள்வோம்

**2.மொழி பெயர்க்க :**

1. Linguistics - மொழியியல்
2. Literature - இலக்கியம்
3. Philologist - மொழி ஆய்வ றிஞர்
4. Polyglot - பன்மொழி அறிஞர்
5. Phonologist - ஒலியியல் ஆய்வ றிஞர்
6. Phonetics - ஒலியியல்

**3.அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் **திகழ்கின்றது**. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் **கலந்து கொள்வாள்.** (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் **பேசப்படுகின்றன**. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா **சென்றார்கள்**. (செல்)
5. தவறுகளைத் **திருத்தினான்**. (திருத்து)

**4. வடிவம் மாற்றுக.**

பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம் பெறும் அறிவிப்பாக மாற்றுக.

மருதூர் அரசு மேனிலைப் பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த ‘உள்ளங்கை உலகம்’ என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3:00 மணியளவில்

நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

## அறிவிப்பு

## நூல் வெளியீட்டு விழா

**இடம்** : வெள்ளி விழா அரங்கம், அரசு மேனிலைப் பள்ளி, மருதூர்.

**நாள்** : திருவள்ளுவர் ஆண்டு 2049 ஆனிமாதம் 7 ஆம் நாள் (21.06.2018)

**முன்னிலை** : பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், திருமிகு. மலரவன் அவர்கள்

**தலைமை** : பள்ளித் தலைமை ஆசிரியர் திருமிகு. முஸ்தபா, M.A., M.Ed., அவர்கள்,

**வரவேற்புரை** : இலக்கிய மன்றச் செயலர்

**சிறப்புரை** : கின்னஸ் சாதனை படைத்த முன்னாள் மாணவர் கவிஞர். இன்சுவை

**நூல் வெளியீடு** : பூங்குழலி படைத்த "உள்ளங்கை உலகம்"

**நன்றியுரை** : ரா. அன்பரசன், பள்ளி மாணவர் தலைவர்.

அனைவரும் வருக! அமுதச் சுவை பருக!!

**5.தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.**

1. இளமையில் கல்வி **முதுமையில் இன்பம்**
2. சித்திரமும் கைப்பழக்கம் **செந்தமிழும் நாப்பழக்கம்**
3. கல்லாடம் படித்தவரோடு **சொல்லாடாதே**
4. கற்றோர்க்குச் சென்ற **இடமெல்லாம் சிறப்பு**

**6.கடிதம் எழுதுக.**

உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராம

கிருஷ்ணனின், 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

விருதுநகர்,

28.03.2018

அன்புள்ள நண்பன் எழிலனுக்கு,

பாலன் எழுதிக் கொள்வது. இங்கு நான், என் குடும்பத்தினர் அனைவரும் நலம், அதுபோல நீயும் உன் குடும்பத்தினர் அனைவரும் இறையருளால் நலமுடன் இருப்பீர்கள். என் பிறந்தநாளை கடந்த மாதம் 7.2.18 அன்று கொண்டாடும் போது நீ எனக்கு ஒரு பரிசுப்பொருள் தந்தாய் அல்லவா? சென்ற வாரம் ஞாயிற்றுக்கிழமை ஓய்வாக இருந்தபோது பரிசுப்பொருளைப் பிரித்து வியந்து போனேன்.

**எஸ். இராமகிருஷ்ணன்** அவர்கள், எழுதிய **"கால் முளைத்த கதைகள்"** புத்தகம் பார்த்தவுடன் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இந்நூலை கற்று நான் அறிந்துகொண்ட கருத்துகள், உலகம் எப்படித் தோன்றியது என்ற கேள்விக்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன. இந்தக் கதைகளைச் சொன்ன மனிதர்கள் குகைகளில் வசித்தார்கள். பலநூறு வருடங்கள் கடந்துவிட்டபோதும் இந்தக் கதைகள் கூழாங்கற்களைப்போல வசீகரமாகியிருக்கின்றன.

சிறுவர்களுக்கான கதைகள், உலகமெங்கும் உள்ள முப்பது பழங்குடியினர்கள் சொன்ன கதைகளிலிருந்து தேர்வு செய்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளன. நன்றி நண்பா! நன்கு படி. சிறப்பாக தேர்வுகள் எழுத வாழ்த்துகள்.

அன்புடன்,

பாலன்.

**முகவரி**:

அ. எழிலன், த/பெ மதியரசன்,

1/3, கூலமாட வீதி, கோவை.

**7.நயம் பாராட்டுக** :

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத் தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில் புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே! - ம.இலெ. தங்கப்பா

## இலக்கிய நயம் பாராட்டுதல் ஆசிரியர்

**முன்னுரை** :

ம.இலெ.தங்கப்பா ஓர் இயற்கைக் கவிஞர் பாரதியாரின் 'குயில்பாட்டு' போல பாடியிருக்கிறார். பாட்டு என்பது இசையுடன் தொடர்பு கொண்டது. அப்போது தான் பாட்டு உயிர் பெறுகிறது. அத்தகைய உயிர்ப்பை இப்பாடலில் காண முடிகிறது.

**திரண்ட கருத்து** :

நெடுவானம், கடற்பரப்பு, பெருமலை, பள்ளத்தாக்கு, பொழிகின்ற, புனலருவி அழகில், காட்டில், புல்வெளியில், நல் வயலில், விலங்கில், பறவைகளில் இன்னும் தெரிகின்ற

பொருள்களில். எல்லாம் பயின்று எம் நெஞ்சில் தெவிட்டாத நுண்பாட்டே! மக்கள் மனத்திலும் நீ குடியிருக்க வேண்டும். தூய்மை ஊற்றே, அழகு என்னும் பெருமை கொண்ட ஒழுங்கே மக்கள் மனத்தில் நீ குடியிருக்க வேண்டுவேன்.

**எதுகை நயம்** :

இப்பாடலில் எதுகை நயம் அழகுற அமைந்து விளங்குகிறது எனலாம். அடிதோறும், சீர்தோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயம் ஆகும்.

**சீர் எதுகை** :

பொ**ழி**கின்ற பொ**ழி**லில்; பு**ல்**வெளியில் ந**ல்**வயலில்

**மோனை நயம்** : அடிதோறும், சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயம் ஆகும்.

**வி**ரிகின்ற - **வி**ண்ணோங்கு; **அ**ழகு - **அ**கத்திலும்

**சொல் நயம்** :

கவிஞர், நுண்பாட்டு என்ற சொல்லில் 'நுட்பமான பாட்டு' என்றே குறிப்பிடுகிறார். பாட்டுக்கு, **'அழகு என்னும் பேரொழுங்கு'** என்ற அடை கொடுத்துப் பாடுகிறார்.

**பொருள் நயம்** :

**விண்ணோங்கு, புனலருவிப் பொழில், தெவிட்டாத நுண்பாட்டே** என்று பொருள் நயம் புலப்படப் பாடுகிறார்.

**நிறைவுரை** :

இயற்கையை வருணிப்பதில் தலை சிறந்து விளங்கும் ம.இலெ.தங்கப்பாவை அழகியல் கவிஞர்' என்று கூறினால் அது மிகையாது.

**8.நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க** :

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

**தமிழ் இலக்கிய மன்றம்**
**அரசு மேனிலைப் பள்ளி, திருவாரூர் - 5**

**உலகத் தாய்மொழி நாள் விழா**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **நாள்** | : | திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 9ம் தேதி **(பிப்ரவரி 21)** |
| **தமிழ்த்தாய் வாழ்த்து** | : | |
| **வரவேற்புரை** | : | ச.பூங்குன்றன், இலக்கிய மன்றச் செயலர் |
| **தலைமை** | : | திரு. ப. எழில்முதல்வன், தலைமை ஆசிரியர். |
| **முன்னிலை** | : | திரு. அன்பரசன், தலைவர், முன்னாள் மாணவர் கழகம். |
| **சிறப்புரை** | : | முனைவர். சுப. அண்ணாமலை, தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை-7. |
| **நன்றியுரை** | : | செ. பூவிழி, 9ஆம் வகுப்பு மாணவி. |
| **நாட்டுப்பண்** | | |

**அனைவரும் வருக! தமிழமுது பருக!!**